# மெட்ரோ ரயில் நிலையத்தில் மருத்துவ முகாம்

சென்னை, ஜன.3: சென்னை நேரு பூங்கா மெட்ரோ ரயில் நிலையத்தில் வியாழக்கிழமை நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் 170 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மற்றும் எம்ஜிஎம் ஹெல்த்கேர் அமைப்பு சார்பில், மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம் வியாழக்கிழமை (ஜன.3) முதல் ஜனவரி 31 ஆம்தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, நேரு பூங்கா மெட்ரோ ரயில் நிலையத்தில் இலவச மருத்துவ முகாம் வியாழக்கிழமை காலை 8 மணி முதல் முற்பகல் 11 மணி வரை நடைபெற்றது.

இதில் பயணிகள், பொதுமக்கள், மெட்ரோ ரயில் நிர்வாக ஊழியர்கள் என மொத்தம் 170 பேர் பங்கேற்று பயனடைந்தனர். இவர்களுக்கு ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை அளவு, இதயத்துடிப்பு விகிதம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

**கீழ்ப்பாக்கத்தில்...:** கீழ்ப்பாக்கம் மெட்ரோ ரயில்நிலையத்தில் இலவச மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை (ஜன.4) காலை 8 மணி முதல் முற்பகல் 11 மணி வரை நடைபெறவுள்ளது.